**S.C.No.56/2023**
**PW. 1 : ரேவதி**
**தேதி : 02.12.2025**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**Cr.M.P.1606/2025 மனுவில் 19.11.2025 தேதியன்று உத்தரவிடப்பட்டு மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என் கணவர் இறந்த விஷயம் கேள்விப்பட்டு விபத்து நடந்த இடத்தில் பார்க்கும்போது மாலை 5.30 மணி இருக்கும். என்னை காவல்துறையினர் எதுவும் விசாரிக்கவில்லை. காவல்துறையினர் அங்கு இருந்தார்கள். காவல்துறையினர் மற்றும் அங்கிருந்த நபர்களும் என்னை காவல்நிலையத்திற்கு செல்லும்படி கூறினார்கள். நான் காவல்நிலையம் செல்லும்போது மாலை 7.00 மணி இருக்கலாம். காவல்நிலையத்தில் இருந்தவர்கள் காவலர்களை தவிர மற்ற நபர்கள்

சொல்லித்தான் என்ன நடந்தது என்று தெரிந்துகொண்டேன். நான் காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்துவிட்டு அங்கிருந்து நான் வீட்டிற்கு சென்றவிட்டேன். நான் எதுவும் எழுதவில்லை மற்றவர்கள் எழுதினார்கள் நான் அதில் கையொப்பம் செய்தேன். உங்கள் உறவினர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பிரேதத்தை வாங்காமல் போராட்டம் செய்தார்கள் என்று சொன்னால் சரிதான். சமூகஆர்வலர்கள் போரட்டம் செய்து 2ஆம் எதிரி செல்வக்குமாரை சேர்க்க வேண்டும் சொன்னார்கள் என்று சொன்னால் சரிதான். 2ம் எதிரி செல்வக்குமாரை எதிரியாக சேர்க்க வேண்டும் என்பதற்காக அ.சா.ஆ.2 புகாரை தாயார் செய்து என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்று சொன்னால் சரிதான்.

**மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை**

எனக்கு 2 மகன்கள். சம்பவ சமயத்தில் எனது 2வது மகன் சேரன் பள்ளியில் படித்தார். அன்று என் மகன் பள்ளிக்கு சென்றிருந்தார். என் மகனின் பள்ளிக்கூடம் 4.30 மணிக்கு முடிந்து பள்ளி வாகனத்தில் வந்துவிடுவார். அதன்பிறகு டயூசனுக்காக வாங்கலுக்கு செல்வார். வாங்கலுக்கு செல்லும்போது தான் மோகன்ராஜ் என்பவர் மூலம் என் கணவர் இறந்தது எனக்கு தெரியும். அப்போது மாலை 5.00 – 5.30 மணியிருக்கும். சம்பவ இடத்திற்கும் என் ஊருக்கும் சுமார் 35

கிலோமீட்டர் தூரம் இருக்கும். நான் செல்வதற்கு முக்கால் மணிநேரம் ஆகும். பதற்றத்தில் எவ்வளவு நேரத்தில் சென்றேன் என்று எனக்கு தெரியாது. அ.சா.2 பொன்னுசாமி என் உறவினர். பொன்னுசாமி புகாரில் உள்ள சங்கதிகளை சொன்னார் என்றால் அவர் சொன்னாரா என்று தெரியவில்லை அங்குள்ளவர்கள் பொதுப்படையாக சொன்னார்கள். அதனடிப்படையில் தான் நான் புகார் எழுதி கொடுத்தேன். சமூகஆர்வலர்கள் மற்றும் உங்கள் உறவினர்கள் போராட்டம் செய்த விவரத்தினை தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அவர்களின் வற்புறுத்தலின் காரணமாகத்தான் 2ம் எதிரியின் பெயரை புகாரில் கொடுத்ததாக பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. முதல்விசாரணையின் போது சொன்ன சங்கதிகள் தான் உண்மை என்றும் தற்போது 2ம் எதிரியுடன் ஏதோ ஒரு விவரத்தில் சமரசம் செய்து கொண்டு அவரை காப்பாற்று வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.12.03 17:43:26 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**S.C.No.56/2023**
**PW.2 : பொன்னுசாமி**
**தேதி : 02.12.2025**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள்.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

**Cr.M.P.1606/2025 மனுவில் 19.11.2025 தேதியன்று உத்தரவிடப்பட்டு மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு 1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதன்முதலாக உங்களை காவல்துறையினர் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் கரூர் காந்திகிராமம் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று ஞாபகமில்லை. வேகமாக வந்த வண்டியை பார்த்தவுடன் ஜெகநாதன் ஓரங்கட்டி நின்றுவிட்டார் என்ற தகவலை காவல்துறையினர் என்னை முதலில் விசாரித்தபோது கூறியுள்ளேன். ஓட்டுனரின் பெயரை பின்னால் கேட்டு தெரிந்துகொண்டேன் என்று காவல்துறியனர்

விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல் அவர் பெயர் எனக்கு முன்பே தெரியும். ரஞ்சித்குமார் பெயரை காவல்துறையினர் இரண்டாம் முறையாக விசாரிக்கும்போது நீங்கள் பின்னால் கேட்டு தெரிந்துகொண்டேன் என்று காவல்துறியனர் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டுநர் வேலை செய்து வந்தேன். ஆரம்பத்தில் கனரக வாகனத்தின் ஓட்டுநராக இருந்தேன் தற்போது இளகுரக வாகனத்திற்கு ஆக்டிக் ஓட்டுநராக உள்ளேன். உங்களது தகப்பனார் பெயர் குப்புசாமி என்று சொன்னால் சரிதான். என் விலாசம் சாலிப்பாளையம், குப்பம்அஞ்சல், புகளூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் என்று சொன்னால் சரிதான். பிரேத விசாரணை அறிக்கையில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான் அது எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீங்கள் கண்ணுற்ற சாட்சி இல்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் ஜெகநாதனின் உறவினர் என்பதால் உங்களை கண்ணுற்ற சாட்சியாக இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன். நீங்கள் சம்பவத்தை நேரில் பார்க்காததால் தான் பிரேத விசாரணை அறிக்கையில் உங்களை கண்ணுற்ற சாட்சியாக பிரேத விசாரணை அறிக்கையில் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மருத்துவமனையில் விசாரித்த பிறகு காவல்நிலையத்திற்கு நாங்களே தான் சென்றோம். நான் காவல்நிலையம் செல்லும்போது இரவு 9.00 –10.00 மணி இருக்கும். காவல்துறையினர் விசாரித்து உங்களிடம் கையொப்பம் பெற்றார்களா என்றால் கேட்கவும் இல்லை கையெழுத்தும்

பெறவில்லை. காவல்துறையினர் காவல்நிலையத்தில் வைத்து 1 மற்றும் 2 எதிரிகளாக சக்திவேல், செல்வகுமாரை அடையாளம் காண்பித்து இவர்கள் தான் இந்த வழக்கில் அடையாளம் கூறினார்களா என்றால் சரியல்ல அவ்வாறு காண்பிக்கவில்லை. பெரியசாமி, மோகன்ராஜ் இருவரின் செல்நம்பர் எனக்கு தெரியாது அவர்களிடம் செல்லில் நான் பேசிக்கொள்வேன். உங்களுடைய போன் கால் டீடெய்ல்ஸை பார்த்தால் நீங்கள் பெரியசாமி, மோகன்ராஜ் உடன் பேசிய விவரம் தெரியவரும் என்ற சொன்னால் சரிதான். நீங்கள் சம்பவத்திற்கு முதல் நாள் திருநல்லாறு ஆக்டிங் டிரைவராக சென்றீர்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவத்திற்குமுதல்நாள் வீட்டில் தான் இருந்தேன் வெளியூர் எங்கும் செல்லவில்லை. நீங்கள் சம்பவத்திற்கு முதல்நாள் திருநல்லாறு சென்றுவிட்டு மறுநாள் இரவு 9.30 மணிக்கு தான் கரூர் வந்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையின் போது ஜெகநாதனும் நீங்களும் தனித்தனியாக பைக்கில் எதற்காக சென்றீர்கள், எங்கு சென்றீர்கள் என்ற விவரத்தை கூறவில்லை என்றால் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. நீங்கள் இருவரும் பைக்கில் செல்லவில்லை என்றும் ஆகையால் தான் நீங்கள் காவல்துறை விசாரணையின் போது அதனைப்பற்றி கூறிவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல்விசாரணையில் கூறியது போல் எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் வழக்கிற்காக உருவாக்கப்பட்ட சாட்சி என்று சொன்னால் சரியல்ல. 11.09.2022 ஆம் தேதியன்று காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தில் வைத்து விசாரித்தாரா

என்றால் இல்லை. முதல்முதலாக காவல்துறையினர் விசாரித்தபோது நீங்கள் மகேந்திரா பிக்கப் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் மகேந்திரா பிக்கப்பும், மகேந்திரா பொலீரோ வண்டியும் ஒரே கம்பெனி வண்டி தான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.03 17:43:34 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS.**
**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**
**S.C. No. 56/2023**
**PROSECUTION WITNESS No – 13**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மருத்துவர். அருண்பிரசாத் | **Caste** | : |
| **Father/Husband Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகியுள்ளார்கள். )

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது சென்னை அப்போலோ மருத்துவமனையில் மேற்படிப்பு படித்துகொண்டிருக்கிறேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி இரவு 8.30 மணியளவில் கரூர் அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் மருத்துவராக பணிபுரிந்த போது அடையாளம் தெரியாத ஆண் நபரை ஜே.பி ஆம்புலன்சில் அழைத்து வந்தார்கள். அழைத்து வந்தவரின் பெயர் ஜெயபால்.

அடிப்பட்ட நபரின் வலது தோள்பட்டையில் ஒரு மச்சம், இடது முட்டியில் ஒரு காயத்தழும்பு இருந்தது. வந்தவரை பரிசோதித்து அந்த நபர் இறந்துவிட்டார் என்று கூறி நான் சான்றளித்துள்ளேன். **அந்த சான்றிதழ் இது தான். அந்த சான்றிதழ் நகல் அ.சா.ஆ.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவமனையில் நபரை அனுமதிக்கும்போது விபத்து பதிவேட்டினை நான் பதிவு செய்தேன். அந்த விபத்து பதிவேடு நகல் இது தான். அது அ.சா.ஆ.26 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகமில்லை.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்சொன்ன நபரை மருத்துவமனையில் சேர்த்த பிறகு நான் காவல்துறையினருக்கு இது குறித்து தகவல் அளித்தேன். நான் காவல்துறையினரிடம் 8.30 மணிக்கு தெரிவித்தேன்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**3ம் எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**நீதிமன்ற கேள்வி**

இரவு 8.30 மணிக்கு மருத்துவமனையில் உள்ள காவலரிடம் தகவலை சொன்னேன்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.03 17:43:43 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

## DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 56/2023

## PROSECUTION WITNESS No – 14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **மருத்துவர் R.சங்கீதா** | **Caste** | : | |
| **Father/Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியுள்ளார்கள்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாமக்கல் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.09.2022 அன்று கரூர் அரசு

மருத்துவமனையில் இணை பேராசரியராக பணியிலிருந்த போது பரமத்தி காவல்நிலைய குற்ற எண்.115/2022 என்ற வழக்கில் இறந்துபோன சுமார் 52 வயது மதிக்கத்தக்க ஜெகநாதன் என்னும் ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி பரமத்தி காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள்படி மு.நி.கா.1734 திரு.மதேஷ்வரன் என்பவர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை பெற்று அவரே பிரேதத்தை அடையாளம் காண்பித்து என்னிடம் ஒப்படைத்தார். நான் 11.35 மணிக்கு கடிதமும், பிரேதத்தை பெற்று பின்னர் 11.45 மணிக்கு பிரேத பரிசோதனை தொடங்கினேன். பிரேதமானது சாதாரணமாக உருவம் கொண்டதாக காணப்பட்டது. மரண விரைப்புத்தன்மை பிரேதத்தின் உடல்முழுவதும் காண்பபட்டது. பிரேதத்தின் கைவிரல் நகங்கள் அனைத்தும் வெளிரி காணப்பட்டது. மேலும், அடர் பழுப்பு நிற மண்ணானது பிரேதத்தின் முகம் மற்றும் மார்பு பகுதிகளில் காணப்பட்டது. பிரேதத்தின் மீது காணப்பட்ட வெளிப்புற காயங்கள்,

1.அடர் சிவப்பு சிராய்ப்பு காயங்கள்:–

a) 3 x 3 செ.மீ. அளவில் வலது நெற்றிக்கு கீழே காணப்பட்டது.

b) 3 x 1 செ.மீ. அளவில் வலது கண்ணுக்கு கீழே காணப்பட்டது.

c) 3.5 x 3 செ.மீ அளவில் நடு மற்றும் இடது பக்க மூக்கு பகுதியில் காணப்பட்டது.

d) 4 x 3 செ.மீ இடது முழங்கயையின் பின் பகுதியில் காணப்பட்டது.

e) 7 x 0.5 செ.மீ சீரற்றசிராயப்பு காயம் இடது தோள்பட்டையில் காணப்பட்டது.

f) பலதரப்பட்ட சிராயப்பு காயமானது இடது கையின் பின்பகுதியில் ஒவ்வொன்றும் சுமார் 0.5 x 0.5 செமீ அளவில் காணப்பட்டது.

g) பலதரப்பட்ட சிராயப்பு காயமானது வலது காலில் முன் மற்றும் பின் பகுதியில் காணப்பட்டது. 6 x 4 செ.மீ, 3 x 4 செ.மீ அளவில் இருந்தது.

h) அகன்ற சிராய்ப்பு காயமானது வலது தொடையின் உட்புறமாக 19 x12 செ.மீ அளவில் காணப்பட்டது.

2) சிதைந்த காயங்கள்: –

a) சிராயந்த காயமானது வலது பக்க முன்நெற்றியில் 1.5 x0.5 x0.5 செ.மீ அளவில் காணப்பட்டது.

b) சிதைந்த காயமானது 3.5 x1 செமீ அளவில் வலது பின்புறம் காணப்பட்டது.

c) இடது பக்க முன் கையில் 3 x 1 x1 செ.மீ அளவில் காணப்பட்டது.

d) கிழிந்த காயமானது இடது முட்டியின் வெளிப்புறமாக 7 x 1 x 1 செ.மீ அளவில் காணப்பட்டது.

e) கிழிந்த காயமானது இடது காலின் நடுவில் 7 x 3.5 x 0.5 செ.மீ அளவில் காணப்பட்டது.

f) உருமாற்றம் மற்றும் கிழிந்த காயமானது இடது கணுக்காலில் 6 x2 x1 செ.மீ அளவில் இருந்தது. அதை கூறிட்டு பார்த்தபோது அதன் அடிப்பக்க எலும்பு இரண்டும் முறிந்து அதை சுற்றியுள்ள தசைப்பகுதி கன்றியும் காணப்பட்டது.

g) சிதைந்த கிழிந்த காயமானது இடது இடுப்பு பகுதியில் மற்றும் இடது தொடைப்பகுதியில் 42 x15 x செ.மீ எலும்பின் ஆழம் வரை காணப்பட்டது.

அதை கூறிட்டு பார்த்த போது அதன் அடிப்பகுதி தசைகள், தமனிகள் சிதைந்து காணப்பட்டது. மேலும், இடது தொடை எலும்பு முறிந்தும், விலகியும் காண்ப்பட்டது. அதை சுற்றியுள்ள தசைப்பகுதி கன்றி காணப்பட்டது.

தலைப்பகுதியை கூறிட்டு பார்த்துபோது தலைத்தோலின் உட்பகுதி பின்புறமாக 5 x4 x1 செ.மீ கன்றி காணப்பட்டது. மண்டைஓடு மற்றும் மூளைச்சவ்வு சாதாரமாக இருந்தது. மூளை சாதாரண அளவிலும், பின்பகுதி மூளை முழுவதில் ரத்தம் கசிந்து காணப்பட்டது. மண்டைஓட்டின் அடிப்பகுதி எலும்பு சாதாரணமாக இருந்தது. மார்பு பகுதியை கூறிட்டு பார்த்தபோது மார்பு கூட்டினுள் 50 மி.லி அளவு திரவ ரத்தம் இருந்தது. வலது பக்க விலா எலும்புகள் 3லிருந்து 5 வரை நடுப்பகுதியில் முறிந்து காணப்பட்டது. அதை சுற்றியுள்ள தசைப்பகுதி கன்றி காணப்பட்டது. இடது பக்க விலா எலும்புகள் சாதாரணமாக இருந்தது. இருதயம், மற்றும் நுரையீரல் சாதாரண அளவில் சாதாரணமாக காணப்பட்டது. கழுத்துப்பகுதியை கூறிட்டு பார்த்தபோது கழுத்துப்பகுதியல் உள்ள தசைப்பகுதிகள் மற்றும் குரல்வளை சாதாரணமாக இருந்தது. நாவடி எலும்பு சாதாரணமாக இருந்தது. வயிற்றுப்பகுதியை கூறிட்டு பார்க்கும்போது இரைப்பையில் 150 கிராம் அளவு மஞ்சள் நிற பாதி நிலையில் செரித்த உணவுப்பொருள் எந்தவித நெடியுமின்றி காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் சாதாரண அளவில் காணப்பட்டது. அதை கூறிட்டு பார்த்தபோது வெளிறி காணப்பட்டன. சிறுநீரக பை காலியாக இருந்தது. பிறப்புறுப்பு சாதாரணமாக காணப்பட்டது. தண்டுவடம் சாதாரணமாக காணப்பட்டது. பிரேதத்திலிருந்து உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து ரசாயண பகுப்பாய்விற்காக வட்டார தடய அறிவியல் துறைக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மேலும் ரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு பகுப்பாய்விற்காக அனுப்பிவைக்கப்பட்டது. மேலும் எனது கருத்துரையாக மேற்கண்ட நபர் பலதரப்பட்ட காயங்களினால்

ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் அதிகப்படியான ரத்தப்போக்கின் விளைவுகளினால் இறந்திருக்கக்கூடும் என்று கூறியுள்ளேன். மேலும் இறப்பானது பிரேத பரிசோதனையிலிருந்து சுமார் 12 மணியிலிருந்து 24 மணி நேரத்திற்குள் நிகழ்ந்திருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளேன். ரசாயண பகுப்பாய்வு அறிக்கை பெற்ற பிறகு ரசாயண பகுப்பாய்வு அறிக்கையில் ஆல்கஹாலோ வேறு எந்த பொருளும் இல்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் மேற்கண்ட நபர் பலதரப்பட்ட காயங்களினால் ஏற்பட்ட அதிர்ச்சி மற்றும் அதிகப்படியான ரத்தப்போக்கின் விளைவுகளினால் இறந்திருக்கக்கூடும் என்று கருத்து தெரிவித்து சான்று வழங்கியுள்ளேன். **நான் கொடுத்த பிரேத பரிசோதனை அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொடுத்த இறுதி கருத்துரை இது தான். அது அ.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இருசக்கர வாகனத்தில் செல்பவர் மீது Bolero Pickup போன்ற வாகனம் மோதி இழுத்துச்சென்றால் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்சொன்ன கிழிந்த காயங்கள் வாகனம் இழுத்துச்செல்லும்போது கம்பி வேலியின் மீது இழுத்துச்சென்றால் ஏற்பட வாய்ப்புள்ளது. மேற்சொன்ன காயங்களில் 2 வதாக சொல்லப்பட்ட சிதைந்த காயங்கள் a விலிருந்து e வரையிலான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**1 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**2 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

பிணவிரைப்பு தன்மை தளர்ச்சியடைவதற்கு முன்பாக பிணக்கூறாய்வு செய்யப்பட்டது. பிணவிரைப்பு தன்மை உடல் முழுவதும் பரவுவதற்கு 12 மணி

நேரம் ஆகும். 24 மணி நேரத்திற்கு பின்பு படிப்படியாக பிணவிரைப்பு தன்மை குறையும். 24 மணி நேரத்திற்கு முன்பாக 1 மணி நேரம் அல்லது 2 மணி நேரம் முன்பாக இருந்திருக்கலாம்.

**<u>3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

பிணவிரைப்பு தன்மை ஒரு ஒரு உடல் அமைப்புத்தன்மையை ஒட்டியும், அங்குள்ள சீதோன நிலையை பொறுத்தும் அமையும், நிலையாக இருக்காது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.12.03 17:43:53 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

## DEPOSITION OF WITNESS.

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 56/2023**

**PROSECUTION WITNESS No – 15**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: சந்தோஷ்** | **Caste** | **:** |
| **Father/Husband Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது வெடிக்காரன்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் அன்னை கிரஷர்சில் ஹெல்ப்பராக வேலை செய்தேன். 2022 ஆம் ஆண்டில் நான் அன்னை கிரசரில் வேலைக்கு சேர்ந்து 15

நாட்கள் கழித்து விபத்து நடந்ததாக கூறினார்கள். என்னுடன் அன்னை கிரசர்சில் புவனேஷ்வரன் என்பவரும் வேலை செய்தார். ஆஜர் எதிரி சக்திவேல் ஆபரேட்டரை சாட்சி சரியாக அடையாளம் காண்பித்தார். அன்னை மெட்டல்ஸ் உரிமையாளர் என்று செல்வக்குமாரை சாட்சி அடையாளம் காண்பித்தார். ரஞ்சித்குமாரை பார்த்து எனக்கு தெரியாது என்று சாட்சி கூறினார். கடந்த 10.09.2022 ஆம் தேதியன்று நான் காலை 6.00 மணிக்கு குவாரிக்க சென்றவிட்டேன். காலை 6.00 மணிக்க குவாரிக்கு வேலைக்கு சென்றுவிட்டு மாலை 6.00 மணிக்கு வேலையை முடித்துவிட்டு கிரசருக்க வந்தேன். அங்கு கூட்டமாக இருந்தது காவல்துறையினரும் அங்கு இருந்தார்கள்.

**<u>மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை</u>**

நீங்கள் ஏற்கனவே இதற்கு முன்பு 21.09.2022 ஆம் தேதியன்று அரவக்குறிச்சி உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பு வாக்குமூலம் அளித்தீர்கள் என்றால் காவல்துறையினர் சொல்லிக்கொடுத்து வாக்குமூலம் கொடுத்தேன். குவிமுச பிரிவு 164 வாக்குமூலத்தில் உள்ள 13 கையொப்பங்கள் என்னுடையது தான். **<u>அவை அ.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உள்ள விவரங்களை காவல்துறையினர் சொல்லித்தான் நான் சொன்னேன். அந்த வாக்குமூலம் இதுதான். அது அ.சா.ஆ.30 ஆக குறியீடு செய்யப்படுகிறது</u>**. சம்பவ தேதியன 10.09.2022 ஆம் தேதி சம்பவத்திற்கு

முன்பாக கடந்த 9 மாதங்களாக அன்னை புளூ மெட்டல்சில் ஹிட்டாச்சி ஆபரேட்டராக வேலை செய்து வந்ததாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல நான் வேலைக்கு சேர்ந்து 15 நாட்கள் தான் ஆனது. அன்னை புளூ மெட்டல்ஸ் கிரசரில் உங்களுடன் குமாரசாமி மகன் சக்திவேல் என்பவரும், பூபாலன் மகன் ரஞ்சித்குமார் என்பவர்களும் வேலை பார்த்து வந்தார்கள் என்று சொன்னால் சக்திவேல் மட்டும் தான் என்னுடன் வேலை செய்து வந்தார். 10.09.2022 ஆம் தேதி காலை 9.00 மணியளவில் நீங்களும், புவனேஷ்வரன், சக்திவேல் மற்றும் ரஞ்சித்குமார் கிரசர் ஆபீஸ் அருகில் இருந்தபோது உரிமையாளர் செல்வக்குமார் சக்திவேலையும், ரஞ்சித்குமாரையும் தனியாக கிரசருக்கு பின்புறம் அழைத்துச்சென்று ரகசியமாக பேசினார் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சொல்லவில்லை. சிறிது நேரத்தில் மூவரும் என்னிடம் வந்து என் ஓனர் செல்வக்குமார் மாலை ஜெகநாதன் நம் கிரசர் வழியாக சென்றால் என்னிடம் சொல் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. நானும் புவனேஷ்வரனும் அன்றைய தினம் மதியம் 3.00 மணிக்கு கிரசரில் வேலை செய்து விட்டு வெளியில் ஹிட்டாச்சி அருகில் நின்ற கொண்டிருந்த போது சக்திவேல் எனக்கு போன் செய்து ஜெகநாதன் பற்றி கேட்டார் என்ற சொல்லியுள்ளீர்கள் என்றும் பின்னர் ஜெகநாதன் அவரது இருசக்கர வாகனத்தில் காருடையாம்பாளையம் வழியாக போனபோது புவனேஷ்வரன் போன் மூலம் சக்திவேலுக்கு தகவல் சொன்னதாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் 3.00 மணிக்கு

நான் குவாரியில் இருந்தேன். பின்னிட்டு தூள்சண்முகம் காடு அருகே ஜெகநாதன் அன்னை கிரசர் வாகனம் மோதி இறந்து கிடப்பதாக கிரசர் வழியாக சென்ற ஊர்க்காரர்கள் பேசிக்கொண்டு சென்றதாக கூறியுள்ளீர்களா என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் நடந்த விவரங்களை கூறிவிட்டு தற்போது உரிமையாளருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அரவக்குறிச்சி உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் முன்பு மேற்படி குவிமுச 164 பிரிவு வாக்குமூலம் பதிவு செய்யும்போது காவல்துறை விசாரணையில் கூறியது போல் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**

**<u>2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**

**<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**இல்லை.**

**<u>நீதிமன்ற கேள்வி</u>**

கிரசர் ஆபீசிற்கும், குவாரிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 500 மீட்டர் தொலைவு இருக்கும். தொழிலாளர் சட்டப்படி ஒரு நாளைக்கு 8 மணி நேரம் தான் வேலை செய்ய வேண்டும் என்று சொன்னால் அப்போது எனக்கு 17 வயது ஆகையால் அது பற்றி எனக்கு

தெரியாது. ஒரு சிப்ட் காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. 10.09.2022 அன்று உங்கள் குவாரியில் என்ன வேலை செய்தீர்கள் என்றால் ஹிட்டாச்சிக்கு கீரிஸ் வைத்தேன் ஒரு மணி நேரம் வைத்தேன் குவாரியில் தான் இருந்தேன். குவாரியில் வேலை செய்யும் போது மதிய உணவை கிரசரிலிருந்து எடுத்துச்சென்று குவாரியின் மேல் உள்ள மரத்தடியின் கீழ் அமர்ந்து சாப்பிடுவேன். நான் குவாரியில் வேலை செய்யும்போது என்னுடன் 4 பேர் வேலை செய்தார்கள். நான் வேலைக்கு சேர்ந்த 15 நாட்களும் குவாரியில் குவாரிப்பணிகள் நடந்தது. எத்தனை லோடுகள் குவாரியிலிருந்து வெளியே சென்றது என்று தெரியாது. நான் வேலைக்கு சேர்ந்த 15 நாட்களில் குவாரியில் இருந்து எத்தனை லாரிகள் வெளியே சென்றது என்று தெரியாது. நான் வேலை சேர்ந்த 15 நாட்களும் காலை 6.00 மணிக்கு குவாரிக்கு சென்ற மாலை 6.00 மணி வரை வேலை செய்தேன். என்னுடன் மற்ற 4 பேரும் வேலை செய்து வந்தார்கள்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.12.03 17:44:03 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

## DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 56/2023

## PROSECUTION WITNESS No – 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | **மோகன்ராஜ்** | **Caste** | **:** | |
| **Father/Husband Name** | **:** | | **Calling** | **:** | |
| **Village** | **:** | | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது தேவர்மலை, கடவூர் வட்டத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஒரு சமூக ஆர்வலர். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்குரைஞர் குணசேகரை எனக்கு தெரியும். அவரும் சமூக ஆர்வலர்.

ஆகையால் நான் அவர் அலுவலத்திற்கு சென்று வருவேன். எனக்கு நடராஜன் மகன் சண்முகத்தை தெரியும். கடந்த 22.08.2022 ஆம் தேதி நான் குணசேகரன் அலுவலகத்திற்கு நான் மாலை 6.00 மணிக்கு சென்றிருந்தேன். வழக்கறிஞர் குணசேகரன் அலுவலகத்தில் நான், குணசேகரன் மற்றும் சண்முகம் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது மாலை 6.15 மணிக்கு இறந்துபோன ஜெகநாதன் அலுவலகத்திற்கு வந்திருந்தார். அப்போது ஜெகநாதன் அவரது ஊரில் ஒரு கல்குவாரி செயல்படுகிறது என்று குணசேகரனிடமும், சண்முகத்திடம் சொன்னார். அப்போது குவாரி நடத்துவதால் தூசி நிறைய வருவதாகவும், கால்நடைகள், விவசாயத்தை பாதிக்கப்படுகிறது என்றும் தொடர்ந்து 2019 ஆம் ஆண்டிலிருந்து மனு கொடுத்தும், போராட்டம் செய்து வருகிறார். அவர் வீட்டில் அருகில் இருக்கும் கல்குவாரி அன்னை கிரசர் என்று சொன்னார். அது குறித்து 15.08.2022 அன்று கிராம சபை கூட்டத்தில் அன்னை கிரசருக்கு எதிராக மனு கொடுத்ததாகவும் கூறினார். மேலும் அதற்கு முன்பு அன்னை குவாரி உரிமையாளர் ஜெகநாதனை அடித்துவிட்டதாகவும், அதற்கான புகைபபடங்களை எங்களிடம் காட்டினார். காலில் கட்டு போட்ட புகைப்படங்களை எங்களிடம் ஜெகநாதன் காட்டினார். இது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மனு செய்ய வேண்டும் என்று வழக்கறிஞர் குணசேகரன் கூறினார். அப்போது வழக்கறிஞர் ஜெகநாதனை பார்த்து உங்கள் பெயரில் போட வேண்டும் என்றும் மோகன்ராஜ் பெயரில் போடலாம் என்று கூறினார். வழக்கறிஞர் குணசேகரன் என்னிடம் அன்னை குவாரி உரிமத்தை பற்றி பதிவுத்துறை இணையதளத்தில் அதற்குரிய நகலும் வில்லங்கம் பார்க்கும்படி கூறினார். பிறகு புவியியல் துறை AD Mines க்கு நான் அன்றைய தேதியிலேயே தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் ஒரு

மனுத்தாக்கல் செய்தேன். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது அ.சா.ஆ.31 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த தகவல் அறியும் உரிமை சட்டத்தின் படியான விண்ணப்பம் எ.ம.சா.ஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் எ.ம.சா.ஆ.1–யை அனுப்பி விட்டு வீட்டிற்கு சென்றுவிட்டேன். 10.09.2022 அன்று தான் கடைசியாக நான் ஜெகநாதனை பார்த்தேன். 10.09.2022 அன்று நான் வழக்கறிர் குணசேகரன் அலுவலகத்திற்கு சென்றிருந்தேன் அப்போது நான் மட்டும் தான் அங்கிருந்தேன். அப்போது ஜெகநாதன் மதியம் 1.00 மணிக்கு வந்தார். வேறொரு வழக்கு விஷயமாக பார்க்க சென்றிருந்த ஜெகநாதன் அப்போது என்னை பார்க்க வந்தார். தகவல் அறியும் உரிமை மனு என்ன பதில் வந்தது என்று என்னிடம் கேட்டார். நான் பதில் வந்துவிட்டது என்று கூறினேன். அதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ஜெகநாதன் AD Mines க்கு கொடுத்த மனுவின் அடிப்படையில் AD Mines அலுவலகத்தில் உள்ளவர்கள் JCB உதவியுடன் அன்னை கிரசர் செல்லும் வழியை பள்ளம் பறித்து அடைத்துவிட்டார்கள். அப்போது ஜெகநாதன் இதற்கு முன்பே அன்னை கிரசர் உரிமையாளர் ஆளைவிட்டு அடித்துதாகவும், தற்போதும் தன்னை நோட்டமிட்டு வருகிறார்கள் என்றும் கூறினார். நான் அவரிடம் பார்த்துக்கொள்ளலாம் என்ற கூறினேன். ஜெகநாதனுக்கு பல் வலி இருப்பதால் பல் மருத்துவரை பார்த்துவிட்டு செல்வதாக கூறி மதியம் 1.30 மணிக்க சென்றுவிட்டார். நான் 5.00 மணியளவில் ஊருக்கு சென்றுவிட்டேன். வழக்கறிஞர் குணசேகரன் மெட்ராஸ் சென்றிருந்தார். அங்கிருந்து மாலை 7.30 மணிக்கு எனக்கு குணசேகரன் போன் செய்து ஜெகநாதனை கார் விட்டு அடித்து கொன்று விட்டதாக பதற்றமாக என்னிடம் போனில் கூறினார். 5 நிமிடம் கழித்து நான் குணசேகரனுக்கு போன் செய்து

கார் இல்லை மகேந்திரா மேக்சி டிரக் தான் அடித்தது என்று கூறினேன். ரஞ்சித் என்பவர் தான் ஓட்டினார் என்றும் முன்னாடியே ஜெகநாதன் கூறினார். மறுநாள் ஜெகநாதன் உடலை பார்ப்பதற்காக சென்றேன். அங்கு கூட்டமாக இருந்ததால் நான் வீட்டுக்கு சென்றுவிட்டேன். வேலாயுதம்பாளையம் காவல்துறையினர் என்னை வரச்சொன்னார்கள். அங்கு காவல்துறையினரிடம் நான் நடந்த விவரத்தை கூறினேன்.

**1 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**2 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நீங்கள் சமூகஆர்வலராக எத்தனை நாட்களாக அந்த இயக்கத்தில் இருக்கிறீர்கள் என்றால் நான் சமூக ஆர்வலராக உள்ளேன் மற்றபடி எந்த இயக்கத்திலும் இல்லை. சமூகஆர்வலராக நான் 2020 லிருந்தே உள்ளேன். அதற்கு முன்பு நான் விவசாயம் செய்து கொண்டிருந்தேன். கரூரில் டெக்சில் வேலை செய்து கொண்டிருந்தேன். எனக்கு சண்முகத்தை தெரிந்ததை போல் முகிலனையும் தெரியும். முகிலனும், சண்முகமும் குவாரி நடத்துபவர்களுக்கு எதிராக ஒரு இயக்கத்தை நடத்திவந்தார்கள் என்றால் மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் குவாரிக்கு எதிராகவும் குவாரி நடத்துவதால் பாதிக்கப்பட்ட மக்களுடன் சேர்ந்து போராட்டம் நடத்துவோம். காளிப்பாளையம், குப்பம் கிராமம் அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள கல்குவாரிகள் பற்றி தெரிந்து வைத்துள்ளீர்கள் என்றால் எல்லா குவாரி பற்றி தெரியாது. குவாரிக்கும் கிரசருக்கும் உள்ள வித்தியாசம் பற்றி தெரியும். குவாரிக்கு உரிமம் வழங்குவதற்கு முன்பு AD Mines ஊர்மக்களை விசாரித்து பின்பு தான் உரிமம் வழங்குவார்கள் என்று சொன்னால் வருவாய் அலுவலர்,

மாவட்ட சுற்றுச்சூலழ் பொறியாளர் ஆகியோர் தலைமையில் பொதுமக்களுக்கு அறிவிப்பு கொடுத்து கருத்துகேட்பு கூட்டம் நடத்தி அதன்பிறகு அறிக்கை சமர்பித்து அனுமதி கொடுப்பார்கள் என்ற நினைக்கிறேன். கருத்துகேட்பு கூட்டங்களில் நான் ஒரு சில கூட்டங்களில் கலந்துகொண்டு உள்ளேன். நான் கொடுத்த தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கொடுத்த விண்ணப்பம் இது தான். அது ஏற்கனவே எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சட்டத்திற்கு புறம்பாக குவாரிகள் நடைபெறுகிறதா என்று நீங்கள் எ.ம.சா.ஆ.1ன் மூலம் வாயிலாக கல்குவாரிகள் சட்டப்படி நடக்கிறதா சட்டத்திற்கு புறம்பாக நடக்கிறதா என்று கேட்டீர்களா என்றால் கேட்கவில்லை. எ.ம.சா.ஆ.1–ல் ஜெகநாதன் சார்பாக தகவல் அறியும் மனுவில் கேட்டதாக இல்லை என்று சொன்னால் ஜெகநாதனுக்கு குவாரிக்கு உரிமை உள்ளதா என்று தகவல் தெரிய வேண்டும் என்பதால் நான் எ.ம.சா.ஆ.1–ன் மு்லம் தகவல் கேட்டேன். நீங்கள் சமூக ஆர்வலர் என்ற முறையில் குவாரி உரிமையளார்களின் தகவல்களை தெரிந்து கொண்டு குவாரி உரிமையாளர்களை மிரட்டி பணம் பறிப்பீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எ.ம.சா.ஆ.1–ன் படி 2010 முதல் 2015 வருடத்திற்குண்டான உரிமை பற்றிதான் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். நீங்கள், சண்முகம் வழக்கறிஞர் குணசேகரன் ஆகியோர் சந்திப்பீர்கள் என்ற விவரத்தை காவல்துறையினரிடம் கூறியுள்ளீர்களா என்றால் நான் கூறியுள்ளேன் காவல்துறையினர் தட்டச்சு செய்யும் போது அலுவலக உதவியாளர் என்று தவறுதலாக தட்டச்சு செய்துவிட்டார்கள். ஜெகநாதன் 2019 லிருந்து எந்தெந்த தேதியில் எந்தெந்த குவாரிமீது புகார் கொடுததார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது அன்று நடந்த இந்த வழக்கு சம்பந்தமாக நடக்கும் குவாரி பற்றி

புகார் கொடுத்தார். ஜெகநாதனின் வீட்டிலிருந்து நீங்கள் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்ட சர்வே எண் எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. ஜெகநாதன் கொடுத்த மனுவை நீங்கள் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் ஜெகநாதன் கூறிய விவரத்தை நான் கேட்டுக்கொண்டேன். 2022 ஆகஸ்ட் மாதத்தில் கிராம சபையில் ஜெகநாதன் மனு கொடுக்கும்போது அடித்து அவருக்கு காயம் ஏற்பட்டு அந்த புகைப்படங்களை நீங்கள் பார்த்தீர்கள் என்பதை காவல்துறையினர் விசாரணையில் கூறியுள்ளேன். ஜெகநாதன் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் மனு போடவேண்டும் என்று குணசேகரிடம் கூறினார் என்றும் குணசேகரன் தான் என் பெயரில் போட வேண்டும் என்று சொன்ன விவரத்தை காவல்துறை விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் நான் கூறியுள்ளேன். அன்னை குவாரி என்ற நிறுவனத்திற்குரிய தகவலை பதிவுத்துறை அலுவலகத்திலும், வில்லங்க சான்று போட்டு பார்க்க சொன்ன விவரங்களை காவல்துறை விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் நான் கூறியுள்ளேன். காவல்துறையினர் விசாரணையின் போது AD Mines க்கு மேற்சொன்ன விவரங்களை பெற்ற பிறகு போட்ட விவரத்தை காவல்துறை விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் நான் கூறியுள்ளேன். எ.ம.சா.ஆ.1–க்கும் ஜெகநாதனுக்கும் எந்தவொரு சம்மந்தமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. வேறொரு வழக்கு விஷயமாக ஜெகநாதன் 10.09.2022 அன்று வேறொரு வழக்கறிஞரை பார்த்துவிட்டு உங்களை பார்க்க வந்ததாக சொன்ன விவரத்தை காவல்துறைவிசாரயையில் கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன். ஜெகநாதன் தான் ஒரு வாரத்திற்கு முன்பு போட்ட மனுவின் காரணமாக அன்னை குவாரிக்கு செல்லும் வழியை AD Mines அடைத்து விட்டதாக ஜெகநாதன் உங்களிடம் கூறிய விவரத்தினை காவல்துறை

விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் நான் கூறியுள்ளேன். 10.09.2022 ஆம் தேதி மாலை 7.30 மணிக்கு வக்கீல் குணசேகரன் உங்களுக்கு போன் செய்து முதலில் கார் அடித்து இறந்துவிட்டார் என்று சொன்னார் என்றும் பின்னர் நீங்கள் போன் செய்து மேக்சி வேன் மோதி தான் ஜெகநாதன் இறந்துவிட்டார் என்றும் அதை ஓட்டியது ரஞ்சித்குமார் தான் என்றும் குணசேகரன் என்னிடம் கூறிய விவரத்தை முதல் விசாரணையில் கூறியது போல காவல்துறை விசாரணையில் நீங்கள் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன் போன் நம்பர்களையும் கூறியுள்ளேன். பிணவறையில் என்னை பார்க்கவிடாததால் நான் மருத்துவமனையில் சுமார் 1 மணி நேரம் இருந்துவிட்டு பிறகு தான் சென்றேன். அப்போது அங்கு காவல்துறை அதிகாரிகள் இருந்தார்கள். பிணவறைக்கு வக்கீல் குணசேகரன் கூறியதன் பேரில் தான் நான் மறுநாள் காலை சென்றேன். நீங்கள் ஒரு குற்ற நிகழ்வு குறித்து தெரிந்து கொண்டால் உடனடியாக காவல்நிலையத்திற்கு தகவல் அளிக்க வேண்டும்என்ற விவரம் தெரியும் ஆனால் தெரிவிக்கவில்லை. நான் பிணவறைக்கு சென்ற போது காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை. நீங்கள் சொல்வது போல் சொன்ன நேரத்தில் உங்களுக்கு தகவல் சொல்லவில்லை என்றும் ஜெகநாதனும் நீங்கள் சொன்ன நாட்களில் உங்களை பார்க்கவில்லை என்றும் எந்த தகவலும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. உங்களுக்கு ஜெகநாதன் ஏற்கனவே அறிமுகமானவர் என்றும் 11.09.2022 ஆம் தேதி முதல் 22.09.2022 ஆம் தேதிவரை ஏன் மவுணமாக இருந்தீர்கள் என்பதற்கு காரணம் என்ன என்றால் காவல்துறையினர் வழக்கு தொடர்ந்த நீதிமன்றத்திலிருந்தது காவல்துறையினர் சாட்சியாக அழைத்தால் செல்லலாம் என்று இருந்தேன். நீங்கள் சமூக ஆர்வலர் என்பதாலும், இந்த வழக்கு குவாரி சம்மந்தப்பட்ட

வழக்கு என்பதாலும், பின்னிட்டு உங்களை கலந்து ஆலோசித்து பின்னிட்டு சாட்சியாக சேர்துள்ளார்கள் என்றால் சரியல்ல. காவல்துறையினர் என்னை ஒரு முறை தான் விசாரித்தார்கள். காவல்துறையினர் உங்களை சாட்சியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டு நீங்கள் கூறாத விவரங்களை கூறியாக எழுதிக்கொண்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>3 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.03 17:44:13 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.